செய்தி வெளியீடு

**அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர் சேர்க்கை**
**கல்லூரிக் கல்வி இயக்ககம்**
**இளநிலைப் பட்டப்படிப்பு (Under Graduate Courses) சேர்க்கை**
**2024-2025**
**அறிவிப்பு**

தமிழ்நாட்டில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2024-25 ஆம் ஆண்டிற்கான இளநிலைப் பட்டப்படிப்பு முதலாமாண்டு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் www.tngasa.in என்ற இணையதள முகவரியில் 06/05/2024 முதல் பதிவு செய்யலாம். தாமாக இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க இயலாத மாணவர்கள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள சேர்க்கை உதவி மையங்கள் (Admission Facilitation Centre - AFC) மூலம் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம்மையங்களின் பட்டியல் மேற்குறித்த இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது.

| விண்ணப்பக் கட்டண விவரம் | |
|---|---|
| விண்ணப்பக் கட்டணம்<br>ஒரு மாணவருக்கு : ரூ.48/-<br><br>பதிவுக் கட்டணம் : ரூ.2/- | SC/ST பிரிவினருக்கு விண்ணப்பக் கட்டணம் ஏதுமில்லை.<br><br>பதிவுக் கட்டணம் : ரூ.2/- |

கட்டணம் செலுத்தும் முறை: விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணத்தை விண்ணப்பதாரர்கள் Debit Card / Credit Card / Net Banking / UPI மூலம் இணையதளம் வாயிலாகச் செலுத்தலாம். இணையதளம் வாயிலாகக் கட்டணம் செலுத்த இயலாத மாணவர்கள் கல்லூரிச் சேர்க்கை உதவி மையங்களில் "The Director, Directorate of Collegiate Education, Chennai - 15" என்ற பெயரில் 06/05/2024 அன்று அல்லது அதற்குப் பின்னர் பெற்ற வங்கி வரைவோலை மூலமாக அல்லது

நேரடியாகச் செலுத்தலாம். மாணவர் சேர்க்கை வழிகாட்டி மற்றும் கால அட்டவணையை மேற்குறித்த இணையதளம் வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

தொடர்பு எண்: 044 – 24343106 / 24342911

**கல்லூரிக் கல்வி இயக்குநர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**